காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அனுமந்தபுரம் ஊராட்சி நிர்வாகம் அதிகாரி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: திருமதி K.R. லீலாவதி அவர்கள்

அலுவலக கடிக எண்:11/தொ.அ./2023-2024 நாள்:05.01.2024

பொருள்: மனைப்பிரிவு (LAYOUT) ஒப்புதல் தருமபுரி மாவட்டம் - காரிமங்கலம் ஒன்றியம் அனுமந்தபுரம் ஊராட்சி அனுமந்தபுரம் கிராம சர்வேஎண: 43/1A2, 2A2, 2B2, 2C, 2D2, And 44/2B2, 2C2. ல் 2.53.597 ஹெக்டேர் நிலபரப்பில் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனை பிரிவுக்கு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தருமபுரி அவர்களின் ந.க.எண். YGMIP8LW/2023TCP. நாள். 08.11.2023

2. இவ்வூராட்சி மன்ற தீர்மான எண் : 11/2024. நாள்: 05.01.2024

உத்தரவு:

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம் அனுமந்தபுரம் ஊராட்சிக்குட்பட்ட அனுமந்தபுரம் கிராம சர்வே எண் 43/1A2, 2A2, 2B2, 2C, 2D2, And 44/2B2, 2C2. ல் 2.53.597 ஹெக்டேர் நிலபரப்பில் அமைக்கப்பட்ட குடியிருப்புமனை 135 மனைகள் கொண்ட புதிய மனைப் பிரிவிற்குபார்வை 1-ல் கண்டகடிதத்தின்படி மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை -2ல் கண்ட இவ்வூராட்சி மன்ற தீர்மானம் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மனைபிரிவு ஒப்புதலுக்கு ஊராட்சிக்கு செலுத்த வேண்டியமனைக்கான பரிசீலனைகட்டணம் மனை ஒன்றிற்கு ரூ. 1000/ வீதம் (135x1000) ரூ.135000/ மனைபிரிவுக்கு ஒப்புதல் கட்டணம் ரூ. 1000/ வீதம் 2x1000/ ஆய்வுக்கட்டணம் ரூ. 1000/ மொத்தம் ரூ. 1,38,000/ உரிய அரசு தலைப்பில் 19.12.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே அனுமந்தபுரம் கிராம சர்வே எண் 43/1A2, 2A2, 2B2, 2C, 2D2, And 44/2B2, 2C2. ல் 2.53.597 ஹெக்டேர் நிலபரப்பில் அமைக்கப்பட்ட 135 மனைகள் அடங்கிய மனைப்பிரிவினை குடியிருப்பு உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்திக்கொள்ள இம்மனைப் பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் வழி உத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , தருமபுரி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றுதல் வேண்டும்

(பக்கம்- 1-2)

2. இம்மனுதாரருக்கு 3 அங்கீகரிக்கப்பட்ட நிலவரைப்படத்தில் உள்ளவாறு மட்டுமே மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.
3. மனைப்பிரிவு கட்டிடங்கள் கட்ட ஆரம்பிக்கும் முன்னர் ஊராட்சியில் வீடு கட்டுவதற்கான நீல வரைப்பட அனுமதி பெறவேண்டும் தவறினால் ஊராட்சி சட்ட விதிகளின் படி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. அரசாணை எண் 71 ஊரக வளர்ச்சித் துறை நாள். 01.06.2013- ன் படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவிற்கு இடையூராக மனைப்பிரிவில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது
5. மனைப்பிரிவு வரைபட அனுமதி கட்டணங்கள் குறித்த தணிக்கையில் கட்டி காட்டப்படின் அத்தொகை செலுத்த தாங்களே பொறுப்பாக்கப்படும்
6. எக்காரணத்ததை கொண்டும் மேற்படி விதிகளை உதாசினம் செய்தாலும் மீறினாலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவுகளின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
7. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையின் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்கச் சான்றின் சரித்தன்மையை நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் தருமபுரி மாவட்டம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் (அல்லது) ஆவணங்களின் சரிதன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

K.R. [signature]
தலைவர்
அனுமந்தபுரம் ஊராட்சி
காரிமங்கலம் ஒன்றியம்

5/1/2014

பெறுதல்:

1. திரு. விஸ்வநாதன் த/பெ. சித்துராஜ் 5/27 முள்ளிச்செட்டிபட்டி தும்பிபாடி அஞ்சல் ஓமலூர் வட்டம் சேலம் மாவட்டம்
2. ம.கோ. சங்கர் த.பெ. கோவிந்தன். 21டிமசூதி மதிதோண்பாளையம் தருமபுரி (வ) (ம)

நகல்:

1. உதவி இயக்குநர், நகர ஊரமைப்பு தருமபுரி மாவட்டம்
2. சார்- பதிவாளர் , சார் - பதிவாளர் அலுவலகம், பாலக்கோடு.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ). (கி.ஊ) காரிமங்கலம்.

எலுமிச்சனஹள்ளி ஊராட்சியின்

ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: உ.சென்னமூர்த்தி

அலுவலக கடித எண் : 1

நாள்: 10-11-2023

பொருள்: மனைப்பிரிவு (LAYOUT) ஒப்புதல் தருமபுரி மாவட்டம் – காரிமங்கலம் ஒன்றியம், எலுமிச்சனஹள்ளி ஊராட்சி எலுமிச்சனஹள்ளி - கிராம சர்வே எண். 322/1A ல் 0.12.56 ஹெக்டேர் நிலபரப்பில் மற்றும் எலுமிச்சனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் எலுமிச்சனஹள்ளி கிராம சர்வே எண். . 322/1A ல் 0.12.56 ஹெக்டேர் நிலபரப்பிலும் அனுமந்தபுரம் ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் அனுமந்தபுரம் கிராம சர்வே எண்: 43/1A2 – 0.64.37 ஹெக்டர் நிலப்பரப்பிலும் இரண்டும் சேர்ந்து அமைக்கப்பட்ட குடியிருப்பு மனைபிரிவுக்கு ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக

பார்வை: மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் தருமபுரி அவர்களின் ந.க.எண். YGMIP8LW/2023/TCP. நாள். 10-10-23 2.இவ்வூராட்சி மன்ற தீர்மான எண்: 4 நாள் 10-11-23

உத்தரவு:

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம், எலுமிச்சனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் எலுமிச்சனஹள்ளி கிராம சர்வே எண். 322/1A ல் 0.12.56 ஹெக்டேர் நிலபரப்பில் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனை 5 மனைகள், மற்றும் எலுமிச்சனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் எலுமிச்சனஹள்ளி கிராம சர்வே எண். . 322/1A ல் 0.12.56 ஹெக்டேர் நிலபரப்பிலும் அனுமந்தபுரம் ஊராட்சிக்குட்பட்ட கிராமத்தில் அனுமந்தபுரம் கிராம சர்வே எண்: 43/1A2 - 0 - 64.37 ஹெக்டர் நிலப்பரப்பிலும் இரண்டும் சேர்ந்து மேற்படி இரண்டு கிராம பஞ்சாயத்துகளிலும் சேர்ந்து அமைந்துள்ள குடியிருப்பு மனை 7 மனைகள் கொண்ட மொத்தம் 12 புதிய மனைப் பிரிவிற்கு பார்வை 1-ல் கண்ட கடிதத்தின்படி மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 4/23 கண்ட இவ்வூராட்சிமன்ற தீர்மானம் மூலமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது மேலும் இம்மனைபிரிவு ஒப்புதலுக்கு ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய மனைக்கான பரிசீலனை கட்டணம் மனை ஒன்றிற்கு ரூ.1000/- வீதம் (5*1000) ரூ.5,000/- மேலும் எலுமிச்சனஹள்ளி, அனுமந்தபுரம் இரண்டு கிராம பஞ்சாயத்திற்கு சேர்ந்த வகையில் செலுத்த வேண்டிய மனைக்கான பரிசீலனை கட்டணம் மனை ஒன்றிற்கு ரூ.1000/- வீதம் (7*1000) ரூ.7,000/- மொத்தம் ரூ.12,000/- மனைபிரிவுக்கு ஒப்புதல் கட்டணம் ரூ.1000/- வீதம் 2x1000*2000/- ஆய்வுகட்டணம் ரூ.1000/. மொத்தம் ரூ.15,000/- உரிய அரசு தலைப்பில் 6-12-23 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

எனவே எலுமிச்சனஹள்ளி கிராம சர்வேஎண் 322/1A -ல் 5 மனைப்பிரிவுகளும் மற்றும் எலுமிச்சனஹள்ளி கிராம சர்வே எண். . 322/1A, அனுமந்தபுரம் கிராம சர்வே எண்: 43/1A2 இரண்டு கிராம பஞ்சாயத்திற்கு சேர்ந்த வகையில் 7 மனைப்பிரிவுகளும் அடங்கிய 12 மனைப்பிரிவினை குடியிருப்பு உபயோகத்திற்காக மட்டும் பயன்படுத்திக்கொள்ள இம்மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவு வழங்கப்படுகிறது

நிபந்தனைகள்:-

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தும் பின்பற்றுதல் வேண்டும்

2 இம்மனுதாரருக்கு 3 அங்கிகரிப்பட்ட நில வரைப்படத்தில் உள்ளவாறு மட்டுமே மனைபிரிவிற்கு அனுமதி அளிக்கப்படுகிறது, முன் அனுமதியின்றி எவ்வித சிறு மாற்றமும் செய்யக்கூடாது

3 மனைப்பிரிவு கட்டிடங்கள் கட்ட ஆரம்பிக்கும் முன்னர் ஊராட்சியில் வீடு கட்டுவதற்கான நில வரைபட அனுமதி பெறவேண்டும் தவறினால் ஊராட்சி சட்டவிதிகளின்படி தகுந்த நடிவடிக்கை மேற்கொள்ளப்படும்

4 அரசாணை எண்.71 ஊரக வளர்ச்சித்துறை நாள் 01.06.2013-ன்படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவிற்கு இடையூராக மனைப்பிரிவில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது.

5. மனைப்பிரிவு வரைபட அனுமதி கட்டணங்கள் குறித்த தணிக்கையில் சுட்டிகாட்டப்படின் அத்தொகை செலுத்த தாங்களே பொறுப்பாக்கப்படும்.

6 எக்காரணத்தை கொண்டும் மேற்படி விதிகளை உதாசீனம் செய்தாலும் மீறினாலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

7. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையின் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்கசான்றின் சரித்தன்மையை நகர ஊரமைப்பு உதவி இயக்குநர், தருமபுரி மாவட்டம் அவர்கள் உறுதிசெய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்படுகிறது இதில் ஏதேனும் தவறுகள் (அல்லது) ஆவணங்களின் சரிதன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கிகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

S. Chet 10/1/2023

தலைவர்

ஊராட்சி மன்றதலைவர் எலுமிச்சனஹள்ளி ஊராட்சி

எலுமிச்சனஅள்ளி ஊராட்சி

[illegible]

காரிமங்கலம் ஒன்றியம்

காரிமங்கலம் ஒன்றியம்

பெறுதல்:-

1. திரு. விஸ்வநாதன்

த/பெ. சித்துராஜ், 5/27, முள்ளிச்செட்டிபட்டி, தும்பிபாடி அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.

2. ம. கோ. சங்கர்

த/பெ. கோவிந்தன், 21D, மசூதி தெரு, மதிகோன்பாளையம், தருமபுரி வட்டம், தருமபுரி மாவட்டம்.

நகல்:-

1. உதவி இயக்குநர், நகர ஊரமைப்பு தருமபுரி மாவட்டம்

2. சார்-பதிவாளர். சார்-பதிவாளர் அலுவலகம் பாலக்கோடு

3. வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ | கி.ஊ}} காரிமங்கலம்